

# மனப்போக்கை மாற்றி அமைத்த கலைஞரின் முன்னெடுப்பு

**க**லைஞரின் தொடக்ககால நாடகங்களாக அனார்கலி, சாம்ராட் அசோகன், சாக்ரட்டீஸ் என்பனவும் அமைந்தன. தமிழ் மண்ணுடன் தொடர்பற்ற இந்தக் கதைகளை நாடகமாக்கி மக்களிடம் கொண்டுசெல்வது அவ்வளவு எளிதன்று. ஆனால், கலைஞர் அறுபதுகளுக்கு முன்பே இதைச் செய்துள்ளார். இதுபோன்று பிறமொழிக் கதைக்கருத்தியலைத் தமிழ்ச் சூழலுக்குக் கலைஞர் அறிமுகம் செய்துகொண்டிருந்த சமகாலத்தில், தனிநாயகம் அடிகள் முதலான அறிஞர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களை இந்திய மற்றும் உலக மொழி நூல்களுடன் ஒப்பிட்டுக்கட்டுரைகளையும் நூல்களையும் எழுதிக்கொண்டு இருந்தனர். எனினும், பெருமைமிகு தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப்பிற மொழியினர்க்கு அறிமுகம் செய்யும்பணி வேகம்பெறவேண்டி இருந்தது. இந்த வேகத்திற்குக் கால்கோள்விழா நிகழ்த்திய பெருமை கலைஞர்க்குரியது.

கலைஞரின் பெருமுயற்சியால் வெளிவந்த செம்மொழி அறிவிப்பானது, இந்திய அளவில் பேசுபொருளானது. இதனால், பிற மாநில மக்கள் தமிழகத்தை மொழிசார்ந்து திரும்பிப்பார்த்தனர். இதன் தொடர் விளைச்சல்கள் எண்ணற்றவை. அவற்றில் முத்தாய்ப்பானவை செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவன உருவாக்கமும் ஜே.என்.யு.வில் தமிழாய்விற்கு வழிசெய்ததும் ஆகும்.

இந்தியப் பிரதமர் அண்மையில் செம்மொழி நிறுவனத்திற்கான கட்டடத்தைத் திறந்து வைத்தார். அந்த நிறுவனம், 75 ஆண்டுகாலச் சுதந்திர இந்தியாவில் முதல்முறையாகத் தமிழ்ச் செவ்வியல் நூல்களை இந்தி முதலான மொழிகளில் வெளியிட்டுவருகிறது. இதனால், இந்திய மொழி அறிஞர்கள் தங்களின் தாய்மொழியில் தமிழ்ச் செவ்வியல் நூல்களைப் படிக்கும் ஆய்வுக் குட்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இது, தமிழ்மொழி தொடர்பான நல்லதொரு கருத்தியலை இன்னும் சில ஆண்டுகளில் இந்தியச் சூழலில் வலுப்படுத்தும். இத்தகு கருத்தாக்க முறை செயலாக்கத்திற்கு வழிவகுக்கும்.



இரா.அறவேந்தன்
பேராசிரியர், தலைவர்
சிறப்புநிலைத் தமிழ்த்துறை,
ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகம்

இந்தி மறுப்புச் சூழலில் பிறமொழியினரிடம் தமிழகம் தொடர்பாக உருவான பார்வையிலிருந்து வேறுபட்ட பார்வையைச் செம்மொழி அறிவிப்பு உருவாக்கி வருகிறது. இதனால், 'தேவபாஷை நீசபாஷை' என்ற கருத்தாடல்கூட வெகுவிரைவில் கரைந்துபோகும் சூழல் உள்ளது. தற்போதைய இந்தியச் சூழலில் சமஸ்கிருதம் அறிந்தவர்களை உயர்வாக மதிக்கும் மனபோக்கு உள்ளது. இதுபோன்றதொரு மனப்போக்குத் தமிழ்மொழி சார்ந்தும் வெகுவிரைவில் கிட்டும். இது தொடர்பான ஒன்று இரண்டு நிகழ்வுகளை இங்கு நினைவுகூர்தல் பொருத்தமாக இருக்கும்.

சமஸ்கிருதமொழிக்குரிய முதல் இலக்கண நூல் பாணினியம் ஆகும். இந்த நூலை மாதிரியாகக் கொண்டு தமிழ் மொழிக்குரிய தொல்காப்பியம் எழுதப்பட்டது என்ற கருத்து அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழ்ச் சூழலில் நிலவி வருகிறது. இதற்குத் தக்க மறுப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. இது ஏதோ நூல்களுக்கு இடைப்பட்ட 'கொடுக்கல் வாங்கல் அறிவுப் பகிர்வு' என்ற நிலைகளுக்கு அப்பால், கொடுத்தவர் உயர்ந்தவர் பெற்றவர் தாழ்ந்தவர் என்ற மனப்போக்கிற்கும் உரியதாக உள்ளது. இந்த மனப்போக்கை அண்மைநிகழ்வு ஒன்று மாற்றி அமைக்கிறது. இது நாள்வரை தமிழறிஞர் தொல்காப்பியம் வேறு பாணினியம் வேறு; என்று குறிப்பிட்டனர். தற்போது இக்கருத்து சமஸ்கிருத அறிஞர்பக்கமிருந்தும் வரத்தொடங்கி உள்ளது. விவரம் வருமாறு:

தில்லியில் 'ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி தேசிய சமஸ்கிருதப் பல்கலைக்கழகம்' உள்ளது. அதில் இலக்கணத்திற்கு எனத் தனித்துறை உள்ளது. அதன் தலைவராகப் பேராசிரியர் சுஜாதா திரிபாதி உள்ளார். இவர், பாணினியத்திலிருந்து தொல்காப்பியம்வேறுபட்டுள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறார். இதற்கு அடிப்படையாக இருப்பது தொல்காப்பிய இந்தி மொழி பெயர்ப்பாகும். இந்த மொழிபெயர்ப்பு, ஜே.என்.யு.வில் பணியாற்றிய தமிழ்ப் பேராசிரியர் கி.நாச்சிமுத்து அவர்களின் மேற்பார்வையில் பேராசிரியர் எச்.பாலசுப்பிரமணியம் அவர்களால் செய்யப்பட்டது ஆகும். இந்த மொழிபெயர்ப்புத் திட்டத்திற்கு நிதி உதவி அளித்ததுடன் நூலாகவும் சென்னையிலுள்ள செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த நூலை இந்தி மற்றும் சமஸ்கிருத அறிஞர்கள் வழி அறிமுகம் செய்யும் வகையிலான உரையரங்கம் ஒன்று கடந்த ஆண்டு ஜே.என்.யு.வில் நிகழ்த்தப்பட்டது. இந்த உரையரங்கத்தின் தொடக்கவிழாவில் சிறப்புரை ஆற்றியபோது தான் பேராசிரியர் சுஜாதா திரிபாதி வரலாற்றுச்சிறப்பு மிக்க தன்கருத்தை முன்வைத்தார். இந்த நிகழ்வில் துணைவேந்தர் சாந்தி ஸ்ரீ பண்டிட் அவர்களின் விருப்பத்திற்கு இணங்க ஜே.என்.யு. வில்முதன்முதலில் 'நீராரும் கடலுடுத்த' என்றமை யும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பட்டது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவையாவும் செம்மொழி அறிவிப்பின் தொடர் விளைச்சல்கள் என்பது இங்கு மீண்டும் நினைவில் கொள்ளத்தக்கது.

இந்தச் செம்மொழிஅறிவிப்பு கலைஞரின் பெருமுயற்சியால்தான்வெளிவருகிறது. ஊடே, ஜேஎன்யுவில் தமிழாய்விற்குத் தனி இருக்கை உருவாக்கப்படும் அதற்குத் தமிழ்நாடு அரசு நிதி உதவி செய்யும் எனும் கருத்தையும்சட்டமன்றத்தில் கலைஞர் அறிவிக்கின்றார். தமிழ்நாடு அரசுக்கும் ஜே.என்.யு. நிருவாகத்திற்கும் இடையே கலந்துரையாடல் நிகழ்கிறது.

தொடர் முயற்சியால் யுஜிசி எனும் மத்திய அரசின் நிறுவனம், ஜே.என்.யு.வில் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரை நியமிக்க ஒப்புதல் வழங்குகிறது. தமிழ்நாடு அரசும் மற்றோர்ஆசிரியரை நியமனம் செய்ய உதவுகிறது. ஆய்வு மாணவர்கள் சேர்கின்றனர். ஆய்வாளர்கள் பிறமொழிகளைக் கற்றுத் தமிழாய்வை மேற்கொள்கின்றனர். யாஸ்கரின் நிருக்தத்துடன் தொல்காப்பியம் திவாகரத்தை ஒப்பிட்டு ஆராயவேண்டிய சூழலில் சமஸ்கிருதம் கற்கப்பட்டது. மொழிகற்றலில் கூடுதல் கவனம் செலுத்திய ஆய்வாளர்கள் அத்ருஷ்ட், காவிய பிரகாசம், லெஷான் ஸோன் த ஜெஸ்த் ஆகிய நூல்களை முறையே கொங்கணி, சமஸ்கிருதம், பிரன்ஞ்ச் மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்தனர். காவியாலங்காரம் என்ற அணியியல் நூலும் நீதித்விஷஷ்டிகா என்ற அற இலக்கியமும் சமஸ்கிருதத்திலிருந்தும் முக்தாவளி என்ற அற இலக்கியம்தெலுங்கிலிருந்தும் தமிழாக்கம் செய்யப்பட்டன. மொக்கல்லானம் எனும் பாலிமொழி நூல் இந்தி மொழிவழித் தமிழாக்கம் செய்யப்பெற்றது. அரிஸ்டாட்டிலின் இயற்பியல் என்ற நூல் கருத்துநிலையில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெனிஸ் நகரில் வெளியிடப்பட்டது. ஒடியமொழிச் செவ்விலக்கியமான பௌத்த கானா ஓ தோகாவும் தமிழாக்கம் செய்யப்பட்டது.

ஜார்ஜ் ஹார்ட், லியன்ஹார்டு, அலெக்சாண்டர் துப்யான்ஸ்கி ஆகியோர் எழுதிய ஆய்வுநூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டன (விவரம் இணைப்பில்). இத்தகு ஆய்வுப்பணிகள், தமிழும் சமஸ்கிருதமும் தனித்தன்மை வாய்ந்த வெவ்வேறு செவ்வியல்மொழிகள் என்ற கருத்தைப்பிற மொழி அறிஞரிடம் கொண்டு சேர்த்துள்ளன. இதனால், வட இந்தியப் பகுதியில் வலுவாக நிலவிவந்த 'சமஸ்கிருதமே எல்லா இந்திய மொழிகளுக்கும் தாய்' என்று கற்பிதம்செய்யப்பட்ட பொதுப்புத்தி யானது வலுவிழக்கத் தொடங்கியுள்ளது. நம் இந்தியப் பிரதமர்காசித் தமிழ்ச்சங்கம் நிகழ்வில் உரையாற்றுகையில்'தமிழ்மொழியைப் பெருமைப் படுத்துவதில் நாம் பின் தங்கியுள்ளோம். தமிழ்ப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதுடன் செழுமைப்படுத்துவது நம் 130 கோடி மக்களின் பொறுப்பாகும். தமிழைப் புறக்கணித்தால், தேசத்திற்குப் பெரும் கேடு விளைவிப்பவர்களாக ஆகிவிடுவோம்' என்றுகுறிப்பிட்டுள்ளதும் கவனத்திற்குரியது. ஆக, கலைஞரின் செம்மொழி வேட்கை என்பது உணர்வுவயப்பட்டது அல்ல; முற்றிலும் அறிவுவயப்பட்டது, தொலைநோக்குப் பார்வையில் உருவானது எனலாம். செம்மொழி அறிவிப்புவழிஅன்று கலைஞர் ஊன்றிய விதைதான் இன்று 'தனித்துறை' எனும் விருட்சமாக ஜே.என்.யு.வில் உயர்ந்து நிற்கிறது.

**இணைப்பு**

ஜே.என்.யு. தமிழாய்வாளர்வழித் தமிழுக்குக் கிடைத்துள்ளவை:

- தலித் கவிதைகள் (இந்தி)
- காதந்திரம் (சமஸ்கிருத இலக்கணம்)
- காவியப்பிரகாசம் (சமஸ்கிருத அணிநூல்)
- காவியாலங்காரம் (சமஸ்கிருத அணி நூல்)
- நீதித்வி ஷஷ்டிகா (சமஸ்கிருத அற இலக்கியம்)
- சிருங்கார சதகம் (சமஸ்கிருதம்)
- கச்சாயனம் (பாலி இலக்கணம்)
- நாட்டுப்புறக் கதைகள் (ஒராவ்ன்)
- இசுமத் சுக்தாய் சிறுகதைகள் (உருது)
- எச்.நாகவேணி சிறுகதைகள் (கன்னடம்)
- லெஷான்ஸோன் த ஜெஸ்த் (பிரெஞ்சு வீரநிலைக் கவிதை)
- தேவதைக் கதைகள் (பிரெஞ்சு)
- மொக்கல்லானம் சொல் (பாலி இலக்கணம்)
- முக்தாவளி (தெலுங்கு அற இலக்கியம்)
- அரிஸ்டாட்டிலின்இயற்பியல் (கிரேக்கம்)
- அரிஸ்டாட்டிலின்அணியியல் (கிரேக்கம்)
- அரிஸ்டாட்டிலின்மொழியிய வகைப்பாடு (கிரேக்கம்)
- அத்ருஷ்ட்(யார்அறிவாரோ) (கொங்கணிக் குறும்புதினம்)
- மோகன்ராகேஷ் நாடகங்கள் (இந்தி)
- பிரேம்சந்த் சிறுகதைகள் (கதையாடலும் கதைக்கருக்களும்) (இந்தி)
- சரியகீத்தி(ஒடியச்செவ்விலக்கியம்)
- தொல்காப்பியமலையாள மொழிபெயர்ப்புகள் (மலையாளம்)
- மலையாளபாஷா - தொல்காப்பியத்தில் (மலையாளம்)
- அல்கிதாப் (அரபு இலக்கணம்)
- தமிழ் - சமஸ்கிருதச் - செவ்விலக்கிய உறவுகள் (ஆங்கிலம் ஜாரஜ் ஹார்ட்)
- தமிழ்ச் - செவ்விலக்கியங்கள் - அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும் (ஆங்கிலம் ஜாரஜ் ஹார்ட் )
- லியன்ஹார்டு ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு (ஆங்கிலம்)
- பண்டைத்தமிழ் இலக்கியங்களின் சடங்கியல், புராணவியல் மூலங்கள்(ஆங்கிலம் - அலெக்சாண்டர் துப்யான்ஸ்கி).



## கலை கலைக்காகவா?

**க**லை கலைக்காக எனக்
கதைப்போர் ஓய்ந்து விட்டார்;
கவின் ஒளி வீட்டுக்காக;
விளக்குக்காக அல்ல என
விளக்கம் பெற்றார்.

- கலைஞர்



## முப்பெருங் கதைகள் !

**த**மிழ்நாட்டிலே இருக்கின்ற பெரிய சமுதாயமாக இருக்கின்ற முக்குலத்தோர் சமுதாயத்திற்காகத் தென்பாண்டிச் சிங்கம், கொங்கு வேளாளர் சமுதாயத்திற்காகப் பொன்னர் சங்கர், வன்னியர் சமுதாயத்திற்காகப் பாயும் புலி பண்டாரக வன்னியன்.

அவருடைய இயற்பெயர் இலங்கையிலே, 'பாயும் புலி பண்டார வன்னியன்' என்றுதான் இருந்தது. இருப்பினும் பண்டாரன் என்று சொன்னால், வேண்டுமென்றே கருணாநிதி இழித்துரைக்கிறார் என்று கோள் மூட்டக் கூடும். எப்போதும் 'OFFENCE' எளிது; 'DEFENCE' அரிது. எனவேதான், சொல்லும்போதே பண்டாரக வன்னியன் என்று சொல்லிவிடுவோம் என்று, 'பாயும் புலி பண்டாரக வன்னியன்' வரலாற்றை எழுதி முடித்தேன்.

- கலைஞர்